பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 06 2024 **SATURDAY** **12.40 PM**

<u>முதலைப்புச் செய்திகள்</u>

1. இத்தாலியில் அரசு முறைப்பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுதில்லி திரும்பினார்.

2. நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக அமையும் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. பீகார் ஆளுநர் மாளிகையில் இரண்டு நாள் மாங்கனி திருவிழா இன்று தொடங்கியது.

4. தில்லியில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை கண்டித்து பிஜேபி மற்றும் காங்கிரஸ் சார்பில் இன்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

5. ஆசிய ஜுனியர் துடுப்பு படகு சாம்பியன் போட்டியில் இந்தியா ஒருதங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, இத்தாலியில் அரசு முறைப்பயணத்தை முடித்துக்கொண்டு இன்று புதுதில்லி திரும்பினார்.

இத்தாலியில் நடைபெற்ற ஜி-ஏழு உச்சிமாநாடு ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த மாநாட்டில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய நன்மைக்கான அம்சங்கள் இந்த விவாதங்களில் இடம்பெற்றதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டையொட்டி, இத்தாலி, இங்கிலாந்து பிரதமர்களுடனும், பிரான்ஸ், யுக்ரைன் அதிபர்களுடனும் பிரதமர் பேச்சு நடத்தியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாகவும், சம்பந்தப்பட்ட நாடுகளுடனான நல்லுறவை வலுப்படுத்தும் வகையில் இருந்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

நாடாளுமன்றத்தின் மாண்பினை காக்கும் வகையில் புதிய உறுப்பினர்கள் செயல்படுவார்கள் என்று தாம் நம்புவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், மக்களவை கூட்டத்தொடர் வரும் 24-ஆம் தேதி தொடங்கவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற அனைத்துக்கட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவதை அரசு ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருப்பதாகவும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் இரண்டு லட்சம் ரூபாய் வரையிலான வேளாண் கடன்களை தள்ளுபடி செய்வதென அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதன்மூலம், ஒரு லட்சத்து 91 ஆயிரம் விவசாயிகள் பயனடைவார்கள் என்று அம்மாநில வேளாண் அமைச்சர் திரு **Badal Patralekh** கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, வங்கி அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அவர் பேசினார்.

கடன் தள்ளுபடிக்கான விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அக்கூட்டத்தில் அவர் அறிவுறுத்தினார்.

2020-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதிவரை 50 ஆயிரம் ரூபாய் முதல், 2 லட்சம் ரூபாய் வரை வேளாண் கடன் பெற்றவர்களுக்கு இந்த தள்ளுபடி திட்டம் பொருந்தும் என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>

பீகாரில் மாங்கனி திருவிழாவை அம்மாநில ஆளுநர் திரு ராஜேந்திர விஷ்வநாத் அர்லேக்கர் இன்று தொடங்கிவைத்தார்.

பாட்னாவில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் அவர் இதனை தொடங்கிவைத்தார்.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த திருவிழாவையொட்டி, மாம்பழ கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாம்பழம் உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான விவாதங்களும் இந்த திருவிழாவையொட்டி நடைபெறவுள்ள கலந்துரையாடல் நிகழ்ச்சியில் இடம்பெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பீகாரில் உள்ள ஆளுநர் மாளிகையில் மாங்கனி திருவிழா நடைபெறுவது இதுவே முதல் முறையாகும்.

மத்தியப்பிரதேசத்தின் போபாலிலும் மாங்கனி திருவிழா தற்போது நடைபெற்று வருகிறது.

நபார்டு ஏற்பாடு செய்துள்ள இந்த மாங்கனி திருவிழா வரும் செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த திருவிழாவில் 24 வகையான மாம்பழங்கள் விற்பனை செய்யப்படுவதாக அவர் மேலும் கூறுகிறார்.

இந்த திருவிழாவில் மத்தியப்பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<<>>>>>

அருணாச்சலப்பிரதேச சட்டப்பேரவைத் தலைவராக திரு **'Tesam Pongte** ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்படடுள்ளார்.

அம்மாநில சட்டப்பேரவையில் இதற்கான அறிவிப்பை இடைக்கால பேரவைத் தலைவர் திரு **Ninong Ering** வெளியிட்டார்.

இதனைத்தொடர்ந்து, பேரவைத் தலைவர் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட திரு **Tesam Pongte** ஒருமனதாக தம்மை தேர்வு செய்ததற்காக உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

பாதுகாப்புப்படை அதிகாரிகள் நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் குறித்து முழுமையாக அறிந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை விமானப்படை தளபதி ஏர்ஷீப் மார்ஷல் திரு வி ஆர் சௌத்ரி வலியுறுத்தியுள்ளார்.

ஹைதராபாத் அருகே உள்ள விமானப்படை அகாடமியில் நடைபெற்ற பயிற்சி நிறைவு பேரணியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

பாதுகாப்பு தொடர்பான விஷயங்களில் இணைய தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கும் என்று அவர் கூறினார்.

எதிர்காலத்தில் ஒரு போரில் வெற்றிபெறுவதற்கு இணைய தொழில்நுட்பங்கள் இன்றியமையாததாகும் என்றும் ஏர்ஷீப் மார்ஷல் திரு வி ஆர் சௌத்ரி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

தில்லியில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை கண்டித்து பிஜேபி சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தில்லி நீர்வளத்துறை அமைச்சர் செல்வி **Atishi** இல்லத்திற்கு எதிராக பிஜேபி-யினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீர் மேலாண்மையை முறையாக கையாளவில்லை என்று கூறி, பிஜேபி இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

இதேபோல், காங்கிரஸும் தில்லி அரசுக்கு எதிராக 250 இடங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

தில்லியில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டுக்கு தார்மீக பொறுப்பேற்று முதலமைச்சர் பொறுப்பை திரு அரவிந்த் கெஜ்ரிவால் ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>

தமிழகத்தின் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் பாமக மாநில துணைத்தலைவர் திரு சி.அன்புமணி போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகுதியில் அடுத்த மாதம் 10-ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது.

<<<<<<<>>>>>

காவிரியில் தமிழகத்திற்குரிய நீரை கர்நாடகாவிலிருந்து பெற திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கர்நாடகாவில் ஆட்சிப்பொறுப்பில் உள்ள காங்கிரஸ், திமுக கூட்டணியில் இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், கர்நாடகாவிலிருந்து தண்ணீரை பெற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் டெல்டா விவசாயிகளை ஏமாற்றும் நோக்கில் சிறப்பு குறுவை தொகுப்புத் திட்டத்தை அறிவித்துள்ளதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் குறை கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

ஒரு கல்லூரியில் சேர்ந்த பின்னர் மற்றொரு கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் செலுத்திய கட்டணத்தை உயர்கல்வி நிறுவனங்கள் திருப்பி செலுத்துவதற்கான புதிய நெறிமுறையை பல்கலைக்கழக மானியக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, நடப்பாண்டில் செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதிவரை மாணவர்களுக்கு கட்டணங்களை முழுமையாக திருப்பி செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 30-ஆம் தேதிக்கு பின்னர், அக்டோபர் மாதம் 31-ஆம் தேதிவரை அதிகபட்சமாக ஆயிரம் ரூபாயை குறைத்துக்கொண்டு கட்டணத்தை திருப்பி செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில், பல்கலைக்கழக மானியக்குழு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

<<<<<<<>>>>>

சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம்தேதி கொண்டாடப்படுவதையொட்டி, இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் 10 நாள் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இதன் ஒருபகுதியாக கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஏராளமானோர் பங்கேற்றனர்.

குடும்பத்திற்கான யோகா என்ற தலைமைப்பின்கீழ் இந்த நிகழ்ச்சி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சுவாமி விவேகானந்தர் கலாச்சார மையத்தின் சார்பில் இந்த யோகா சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

<<<<<<<>>>>>

மும்பையில் மூன்று மாடி கட்டிடத்தின் சுவர் இடிந்து விழுந்ததில் இரண்டு பெண்கள் உயிரிழந்தனர்.

**Wadala** பகுதியில் உள்ள கட்டிடத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது மாடியின் சுவர் இடிந்து விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர்கள் கூறினர்.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ஜூனியர் துடுப்பு படகு சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தின் **Rayong**–ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 500 மீட்டர் பிரிவில் அர்ஜுன் சிங் தங்கப்பதக்கத்தையும், ஆயிரம் மீட்டர் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றார்.

ஆயிரம் மீட்டர் இரட்டையர் பிரிவில் அரவிந்த் வர்மா – ஹர்ஷ் இணை வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றியது.

--------------

உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று கனடாவை எதிர்கொள்கிறது.

ஃபுளோரிடாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

-----

**Perugia** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – ஜெர்மனியின் **Andre Begemann** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இத்தாலியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 3-6, 10-6 என்ற செட் கணக்கில், இத்தாலியின் **Federico Cina- Francesco Maestrelli** இணையை வென்றது.

-------------------

**Nantes** சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tara Shah** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பிரான்சில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 12-21, 21-10, 21-18 என்ற செட் கணக்கில் பிரான்சின் **Leonice Huet**–ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் **Tasnim Mir 21-12, 21-14** என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Purva Barve** –வை வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Alap Mishra 19-21, 21-18, 21-16** என்ற செட் கணக்கில் இத்தாலியின் **Fabio Caponio** –வை வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்

மகளிர் இரட்டையர் பிரிவில் **Ashwini Bhat – Shikha Gautam** இணையும், ஆடவர் இரட்டையர் பிரிவில் நிதின் - விஷ்ணுவர்தன் இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் ரோஹன் கபூர் - ருத்விகா ஷிவானி இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

---------------

**Romania Grandprix** செஸ் போட்டியில் இந்தியாவின் **Nihal Sarin** பட்டம் வென்றார்.

-------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் **Cairns** கோப்பைக்கான செஸ் போட்டியின் இரண்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Harika Dronavali** கூடுதல் புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

**<<<<<<<END>>>>>**